செ.வெ.எண்-30 நாள்-18.03.2018

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் 70-வது பிறந்தநாளை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடும் விழா.

அரியலூர் மாவட்ட வனத்துறையின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் 70-வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மரம் வளர்ப்புத்திட்டத்தில் மரக்கன்றுகள் நடும் விழா கீழப்பழூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப,** அவர்கள் தலைமையில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் மரக்கன்றுகளை நட்டு இன்று (18.03.2018) தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் 70-வது பிறந்தநாளான பிப்ரவரி 24, 2018-ல் சுமார் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார்கள்.

இதன்படி, தமிழகத்தில் 32 மாவட்டங்களிலும் சுமார் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு தீர்மானிக்கப்பட்டு, நடப்பட்டு வருகிறது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் 44,138 மரக்கன்றுகள் நடப்படவுள்ளது. இதில், மாவட்ட வனத்துறையின் சார்பில் அடர்த்தி குறைவான காடுகளில் 24,138 மரக்கன்றுகளும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 20,000 மரக்கன்றுகளும் நடப்படவுள்ளது.

மாவட்ட வனத்துறையின் சார்பில் உயிர் பண்ணை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டிற்கு தேக்கு, செம்மரம், பெருமரம், எலுமிச்சை மரம், பலா, மாதுளை, கொய்யா, வேம்பு ஆகிய மரக்கன்றுகள் விவசாய பட்டா நிலங்கள் வைத்துள்ள விவசாயிகளுக்கு சுமார் 1,10,000 மரக்கன்றுகள் இம்மாவட்டம் முழுவதும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினை இம்மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் பயன்படுத்தி அரியலூர் மாவட்டத்தை பசுமையாக்கிட வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வன அலுவலா் எ.எஸ்.மோகன் ராம், வனவியல் விரிவாக்க அலுவலா் (விரிவாக்க கோட்டம் பெரம்பலூர்) டி.இளங்கோவன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலா் அ.புகழேந்தி, கீழப்பழூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் க.சா.மொழியரசி, வனச்சரக அலுவலா் அ.கணேசன், வனவர் ஆர்.சக்திவேல், வனக்காப்பாளர் சிவக்குமார் மற்றும் ஆசிரியர் பயிற்சி மாணவிகள், அலுவலா்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**